# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,571 — 1965 නොවැම්බර් 27 වැනි සෙනසුරාද — 1965.11.27

14,571 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

(173 ம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், (நானாவித பொருள்கள்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியாகிய, புகநகபாகு பியன்வே விக்ரர் அலெக்ஸான்டர் யஸ்ரின் பூர்ணவன்ச சேனாறத்ன ஆகிய நான், பின்வருமாறு கட்டளையிடுகிறேன் :—

(1) இக்கட்டளை 1965 ம் ஆண்டின் 1 ம் இலக்க (பருத்தித் தையல் நூல்—வெள்ளை) விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும்.

(3) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளிலுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறிக்கப்பட்டுள்ள விலைகள், அவ்வட்டவணையின் 1 ம் நிரையில் இயைபான பதிவில் காட்டப்பட்டுள்ள விவரத்தினைக் கொண்ட எவ்வித பருத்தித் தையல் நூல் (வெள்ளை) வகையும், அவற்றிற்குமேல் விற்கப்படலாகா, முறையே இறக்குமதியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் பாவிப்பாளருக்கு விற்கும் சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும்.

(4) (1) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக ஒரு வியாபாரிக்கு விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை இரண்டு டசினுக்குக் குறையாத ஏதேனும் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்.

(2) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் இரண்டு டசினுக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(5) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட பருத்தித் தையல் நூல் (வெள்ளை) எதனையும் விற்பனைக்காகத் தம் வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த பருத்தித் தையல் நூல் (வெள்ளை) வகையும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய பருத்தித் தையல் நூல் (வெள்ளை) களிற்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளும் குறிப்பிடப்பட்டதொரு அறிவித்தலை, வாங்குபவரால் காணக்கூடியவாறு பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(6) மொத்தமாக அல்லது சில்லறையாக பருத்தித் தையல் நூல் (வெள்ளை) எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும் —

(அ) விற்பனைத் தேதி ;

(ஆ) விற்கப்பட்ட பருத்தித் தையல் நூல் (வெள்ளை) களின் விவரணமும், தொகையும் ;

(இ) விற்கப்பட்ட தொகைக்கு அறிவிடப்படும் விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றனை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(7) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள பருத்தித் தையல் நூல் (வெள்ளை) எதிலும் அதன் இறக்குமதியாளராக அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகின்றதோ அம்மாவட்டத்தின் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு :—

(அ) அவ்விவரத்திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம்வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய பருத்தித் தையல் நூல் (வெள்ளை) களினது கையிருப்பினையும் ;

(ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டகசாலையையும் வேறிடத்தையும் ,

குறிப்பிட்டு விவரத்திரட்டு ஒன்றனை 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் தேதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பித்தல் வேண்டும்.

(8) இதற்குள்ள அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளுள் ஒவ்வொன்றினும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் பருத்தித் தையல் நூல் (வெள்ளை) எதனையும் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

வர்த்தகப் பகுதி, கொழும்பு,
1965 ம் ஆண்டு நொவெம்பர் மீ 27 ந் உ.

பீ. பி. வி. ஏ. ஜெ. பி. சேனாரத்ன,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (நானாவித பொருள்கள்).

அட்டவணை

| நிரை 1<br>பருத்தித் தையல் நூல் (வெள்ளை)<br>விற்பனைக் குறி | | நிரை 2<br>இறக்குமதியாளரின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ஒரு டசின்<br>ரூ. ச. | நிரை 3<br>மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ஒரு டசின்<br>ரூ. ச. | நிரை 4<br>சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒன்றிற்கு<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| அங்கர் (கிளாக்ஸ்) 2/27 கிறெயின் | —இல. 40 ம், 50 ம் (பந்து) .. | 1 12 .. | 1 23 .. | 0 12 |
| அங்கர் (கிளாக்ஸ்) 6/200 யார் | —இல. 10 ம், 12 ம் (றீல்) .. | 10 55 .. | 11 61 .. | 1 11 |
| அங்கர் (கிளாக்ஸ்) 6/200 யார் | —இல. 16 ம் அதற்கு மேலும் (றீல்) .. | 7 40 .. | 8 14 .. | 0 78 |
| பிறுரிஸ்லாவா 4/200 யார் | —இல. 40 (றீல்) .. .. | 3 52 .. | 3 87 .. | 0 37 |
| பிறிட்ஜ் 3/500 யார் | —இல. 40 (ஸ்பூல்) .. .. | 2 80 .. | 3 8 .. | 0 30 |
| கௌ 500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 3 19 .. | 3 51 .. | 0 34 |
| குறெஸ் 2/500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 2 76 .. | 3 4 .. | 0 29 |
| ஈகிள் 500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 2 80 .. | 3 8 .. | 0 30 |
| பினேயிங் கீல் 3/500 யார் | —இல. 40 (கொப்) .. .. | 4 82 .. | 5 30 .. | 0 51 |
| யோகர் அண்ட் பெல் 2/500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 2 86 .. | 3 15 .. | 0 31 |
| கங்காரு 500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 3 0 .. | 3 30 .. | 0 32 |
| கோஹினூர் 2/500 யார் | —இல. 40 (ஸ்பூல்) .. .. | 5 33 .. | 5 86 .. | 0 56 |
| லைரா (கோற்ஸ்) 3/200 யார் | —இல. 40 (றீல்) .. .. | 4 14 .. | 4 56 .. | 0 44 |
| 2 பாறி 500 யார் | —இல. 40 (ரியூப்) .. .. | 3 19 .. | 3 51 .. | 0 34 |
| றெட் ஹாட் (கோற்ஸ்) 2/500 யார் | —இல. 40 (கொப்) .. .. | 3 96 .. | 4 36 .. | 0 42 |
| வயலின் 2/500 யார் | —இல. 40 (கொப்) .. .. | 3 88 .. | 4 27 .. | 0 41 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்டவற்றை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்கள் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலைகளாகும்.

11-89

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.